Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 318 | வெள்ளிக்கிழமை | புரட்டாதி 29 ஆம் நாள் 15 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## வருட இறுதிக்குள் புதிய அரசமைப்பு

### மொட்டுக் கட்சி உறுதி

கொழும்பு, ஒக். 15

"புதிய அரசமைப்பு நிச்சயம் இயற்றப்படும். அதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் இந்தவருடத்துக்குள் நிறைவுபெறும்." என்று அமைச்சர் காமினி

15 >

# 13 ஐ நடைமுறைப்படுத்த ஒரு வழிமுறை கூறுங்கள்

## இந்தியாவிடம் கூட்டமைப்பு கோரிக்கை

மன்னார், ஒக்ரோபர் 15

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். எனினும், 13ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்படுகின்ற அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் வழிமுறை ஒன்றை இந்தியா முன்வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

15 >



## எரிவாயு விலை மீள அதிகரிக்கும்

கொழும்பு, ஒக். 15

நாட்டின் முன்னணி எரிவாயு நிறுவனங்களில் ஒன்றான லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனம் சமீபத்தில் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையை ஆயிரத்து 270 ரூபாவால் உயர்த்தியது. எனினும், விலையை

10 >

### முச்சந்தி முரளி



"மறுபடியும் விலையேற்றமா?
சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி,
விலையேற்றம்தான் வாழ்க்கை
என்றால் தாங்காது பூமி"

## தீயில் எரிந்து பெண் சாவு

### கணவர் கைது

வவுனியா, ஒக்.15

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் தீயில் எரிந்து குடும்பப் பெண்

10 >

## வர்த்தகர் உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி, ஒக்.15

தவறான முடிவெடுத்த வர்த்தகர் ஒருவர் தனது கடையின் முன்பாக, தூக்கில் தொங்கி

10 >

## காயமடைந்தவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 15

வீதியில் சைக்கிளில் சென்றவரை மோட்டார் சைக்கிள்

10 >

## சுழியில் அகப்பட்ட மீனவர் சாவு

முல்லைத்தீவு, ஒக். 15

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் அமைந்துள்ள வெரிகுளத்தில் மீன்பிடிக்கச்

15 >

## வடக்கில் 641 பாடசாலைகள் வரும் வியாழக்கிழமை ஆரம்பம்

### மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஒக்.15

வடக்கு மாகாணத்தில் 200க்கும் குறைந்த மாணவர்களைத் கொண்ட 641 பாடசாலைகளில், தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்பு

15 >



## மீனவர்களின் மோதலுக்கு அரசாங்கமே மூலகாரணம்!

### தமிழ் அரசியல்வாதிகளூடாகச் சதி தமிழ்த் தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 15

கடற்றொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ள கோபாவேசத்தை, திரைமறைவில் நின்றபடி, மேலும் தூண்டிவிட்டு, இரு தரப்பு மீனவர்களை

15 >

## கூட்டமைப்புக்கு இனி கூட்டுத் தலைமையே!

### சுமந்திரனுக்கு செல்வம் பதிலடி

மன்னார், ஒக். 15

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைவராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக்

15 >



### கொழும்பு விளக்கமறியல் சிறையில்

## தொற்றுநீக்கி அருந்தியதால் 2 ஈரானியக் கைதிகள் சாவு!

### 10 பேர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஒக். 15

கொழும்பு விளக்கமறியல் சிறையில் தொற்று நீக்கியை அருந்திய ஈரான் கைதிகள் இருவர் உயிரிழந்

15 >

### 6 மாதங்களின் பின்னர்

## ரிஷாத்துக்குப் பிணை!

யாழ்ப்பாணம், ஒக்.15

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியு

15 >

# ரஞ்சன் ராமநாயக்கவிடம் பண்டோரா ஆதாரங்கள்

**கொழும்பு, ஒக்.15**

**சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பண்டோரா ஆவணத்தில் உள்ள குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் உள்ளன என்று - ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சி தெரிவித்துள்ளார்.**

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில், ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்தித்தபின்னர் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், பண்டோரா ஆவணங்களில் காணப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான (ஓடியோ பதிவுகள்) ஆதாரங்களை முன்வைக்க தேவையான தகவல்கள் தன்னிடம் உள்ளன என்று ரஞ்சன் ராமநாயக்க கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, ரஞ்சன் ராமநாயக்கவை சாட்சிக்காக அழைக்க வேண்டும் - என்றார். (ஏ-4)



## மன்னாரில் 100 விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதை கையளிப்பு

மன்னார், ஒக்.15

பாரம்பரிய நெல் செய்கை மற்றும் இயற்கை முறையிலான நெற் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 100 விவசாயிகளுக்கு ஒரு தொகுதி பாரம்பரிய விதை நெல் மற்றும் பயிர்ச்செய்கைக்கான உதவித்தொகை என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் (மெசிடோவின்) இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் 13 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலப்பரப்புக்கு தேவையான 60 கிலோ சீநெட்டி (சீமாட்டி) பாரம்பரிய நெல் விதைகளும், விவசாய செயற்பாட்டுக்கான செலவாக 6 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

குறித்த பாரம்பரிய நெல் இனம் அழிந்து விடாமல் இருக்க விவசாயிகள் நெற் செய்கை மேற்கொண்டு கிடைக்கும் விளைச்சலில் பிறிதொரு பயனாளருக்கு 60 கிலோ விதை நெல் வழங்கப்பட வேண்டும் என்று மன்னார் மெசிடோ நிறுவனத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-213)

## சபைக் கட்டமைப்பில் மாற்றங்கள் அவசியம்

### *விசாரணைக்குழு அறிக்கை*



கொழும்பு, ஒக். 15

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமாயின், அதன் கட்டமைப்பில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டும் என விசாரணைக்குழு பரிந்துரைந்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின், இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதிகார சபையில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக, ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தது. (ஒ-4)



## பிரதமர் மஹிந்தவை சந்தித்தார் இந்திய இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக்.15

இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனேக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இருநாட்டு இராணுவத்தினருக்கும் இடையே சிறந்த உறவு காணப்படுவதாக சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஜெனரல் நராவனே பிரதமரிடம் தெரிவித்தார்.

உயர் பயிற்சிகளை வழங்கல் உள்ளிட்ட இந்திய இராணுவம் மிக நீண்டகாலமாக இலங்கைக்கு வழங்கிவரும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பில் பிராந்திய மட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)



யாழ்ப்பாணம் மாவட்ட திரிசரணர் குழாம் நடத்திய குருதித்தான முகாம், கொட்டடி, மூவேந்தர் சர்வோதய சிரமதான சங்க முன்பள்ளியில் நடைபெற்றது. குருதித்தானம் வழங்கியவர்களுக்கு எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகத்தினரால் பயன்தரும் மரக்கன்றுகள் கழகத்தலைவரால் வழங்கப்பட்டன. (ஒ-4)

## மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் பெயரில் மாற்றம்



கொழும்பு, ஒக்.15

மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பெயர், லலித் அத்துலத்முதலி உயர் கல்வி உதவித் தொகை நம்பிக்கை நிதியம் என்று மாற்றப்படும் என்று நிதியத்தின் தற்போதைய தலைவரும் வர்த்தக அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த, பல்கலைக்கழக கல்வி வாய்ப்பைப் பெறும் மாணவர்களுக்கு தனது சொந்தப் பணத்தில் நிதியத்தைத் தொடங்கிய மறைந்த வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே இந்தப் பெயர் மாற்றம் இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## அரசியல்வாதிகளின் ஊழலால் பொதுச்சொத்துக்கள் சூறை!

### *'மார்ச் 12 அமைப்பு' சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக். 15

அரசியல்வாதிகளின் ஊழல் நடவடிக்கைகளால் நாட்டின் பொதுச்சொத்துக்கள் பெருமளவு சூறையாடப்படுகின்றன என்று 'மார்ச் 12 அமைப்பு' சுட்டிக்காட்டியுள்ளது.

மார்ச் 12 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; '117 நாடுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள், உலகின் பணக்காரர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்கள் உட்பட 300க்கும் மேற்பட்டவர்களின் நிதிப் பரிவர்த்தனைகளை ஆய்வு செய்துள்ளனர். பிரதமரின் உறவினர் நிருபமா ராஜபக்ச மற்றும் அவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோர் மிகவும் ஆடம்பர வாழ்க்கை வாழ போலி நிறுவனம் மூலம் சொத்து சேர்த்தமை தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் பொருந்தாது என்றாலும், ஒருபுறம் அவை நாட்டின் சமூக விம்பத்தையும், அரசியல்வாதிகளையும் தீவிரமாகப் பாதித்துள்ள நிலையில், மறுபுறம் இவ்வாறு அரசியல்வாதிகளின் ஊழல் நடவடிக்கைகள் மூலம் பொது சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன - என்றார். (ம)

## தனியார் போக்குவரத்தினரால் சலுகை அடிப்படையில் சேவை

மன்னார், ஒக்.15

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில்மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன்கருதி சலுகை அடிப்படையில் சேவைகளை வழங்க தனியார் போக்குவரத்தினர் முன்வந்துள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து தினமும் பயணம் செய்யும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு முப்பது வீதம் கழிவில் வழங்கப்படவுள்ளது.

இதனால் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பயன் அடையக்கூடியதாக இருக்கும். அத்துடன் இரு பகுதினரது நலன் கருதி முறையான உள்ளூர் சேவைகள் நடத்தப்படவுள்ளன-என்றார். (ஐ-60)

# மீனவர்களைப் பகடைகளாக்கி அமைச்சர் டக்ளஸ் கபடநாடகம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.15**

**இந்திய - இலங்கை மீனவர்களிடையே முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் முயற்சிக்கின்றார். அமைச்சரின் கபட நாடகத்தையும், அரசின் கபட நாடகத்தையும் உடனடியாக நிறுத்தி, இழுவைமடித் தொழில் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.**

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் என்.பி.சுப்ரமணியம் தெரிவிக்கையில்;

தொடர்ச்சியாக இலங்கையில் உள்ள மீனவர்கள் அனைவரும் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

காலகாலமாகப் புரையோடிப் போயுள்ள இந்திய மீன்பிடி படகுகளின் அத்துமீறிய வருகையால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக, 2003 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து இன்று வரை பல தரப்பட்ட பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஆக்கபூர்வமான முடிவோ, தீர்வோ எட்டப்படாத சூழலில். இன்றும் எமது கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் மிகையாக இருக்கின்றது.

ராஜபக்ச அரசு வந்த பின்னர் அவர்கள் ஒரு துணிச்சலுடன் எமது கரையை அண்டிய பகுதிகளில் எமது வளங்களை அழிப்பது மட்டுமல்லாமல், எமது தொழிலாளர்களின் தொழில் உபகரணங்களை அறுத்து நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதனால் தமிழக மீனவர்களுக்கும், வடபுல மீனவர்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய மத்திய , மாநில அரசுகள் இந்த இழுவை மடி தொழில் கெடுதலானது. இதை முற்றுமுழுதாக நிறுத்த வேண்டும் என்று கடந்த 2016 ஆம் ஆண்டு அறிக்கையிட்டிருந்தன.

அந்தத் தொழிலில் இருந்து விடுபடுவதற்கான காலஅவகாசத்தைக் கேட்டவர்கள் இன்று வரை அதிலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை.

எமது அரசோ, எமது மீன்பிடி அமைச்சரோ இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த முரண்பாட்டை நிறுத்துவதற்காவது. இந்திய அரசு தனது நாட்டுப் படகுகளை எமது நாட்டுக்குள் வந்து கொள்ளை அடிப்பதை நிறுத்த முயற்சிக்க வேண்டும். இந்திய அரசு வல்லரசாக இருந்துகொண்டு ஒரு சிறிய நாட்டுக்குள் வந்து வளங்களைச் சுரண்டுவதற்கு முயற்சிப்பது மிகக் கேவலமான செயல்.

இரு நாட்டு அரசுகளும் பேசி இதற்கு உடனடியான தீர்வு எடுக்க வேண்டும். இல்லாவிடில் கடலில் குருதிக்கறையை உண்டு பண்ணக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் என்பதை எச்சரிக்கையாக தெரிவித்துக்கொள்கின்றோம். - என்றார். (ஒ-4-319)

## பால், முட்டை விலை இன்று அதிகரிக்கும்?

கொழும்பு,ஒக்.15

பால் மற்றும் முட்டை ஆகியவற்றின் விலை இன்று அதிகரிக்கப்படலாம் என்று துறைசார் இராஜாங்க அமைச்சர் டீ.பீ.ஹேரத் தெரிவித்துள்ளார்.

திரவப்பால் விலையை அதிகரிக்குமாறு விவசாய சங்கங்கள் பல கோரிக்கை விடுத்துள்ளன. திரவப்பாலின் விலையை சந்தையில் உள்ள பால் விலையுடன் ஒப்பிட வேண்டும். அதற்கமைய உள்ளூர் பால் விவசாயிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு உதவ வேண்டிய அவசியம் உள்ளமையால், மில்கோ நிறுவனம் திரவப்பாலின் விலையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## சந்தையில் பால்மாவுக்கு இனித் தட்டுப்பாடில்லை



கொழும்பு,ஒக்.15

நுகர்வோர் சந்தைகளில் வார இறுதியில் தட்டுப்பாடின்றி பால்மா வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பால்மா வர்த்தகர்கள் சங்கத்தின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார். 8 ஆயிரம் தொன் பால்மாவுக்கான தட்டுப்பாடு தற்போது சந்தையில் நிலவுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட தினங்களில் ஒரே தடவையில் பெருமளவு பால்மாவை சந்தைக்கு விநியோகிக்க முடியாதுள்ளது.

ஆயினும் மேலும் 8 கொள்கலன்கள் பால்மா விடுவிக்கப்படுவதற்காக துறைமுகத்தில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த சர்வதேசத்தின் உதவி தேவை!

### கோரினார் ஜி.எல்.பீரிஸ்

சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார செயற்பாட்டை மீட்டெடுப்பதில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மோசமான சவால்களுக்கு மத்தியிலும் 70 சத வீதமான சனத்தொகையினருக்குமேல் தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் நாட்டைப் படிப்படியாகத் திறப்பதற்கு முடிந்துள்ளது. தடுப்பூசி சான்றிதழ்களை பரஸ்பரம் ஏற்றுக்கொள்ள வசதியளிப்பதுடன், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார செயற்பாட்டை மீட்டெடுப்பதில் சர்வதேச சமூகத்தினரின் ஒத்துழைப்பையும் அமைச்சர் கோரினார். கொரோனா நோய்ப்பரவலின்போது இலங்கைக்கான உதவிகள் மற்றும் ஆதரவை வழங்கியமைக்காக, சகல ஐ.நா முகவரமைப்புகள் உட்பட, கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டு தூதரக பணியகங்கள், நன்கொடையாளர், கொழும்பிலுள்ள நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார் -என்றுள்ளது. (ம)




செத்தவீட்டிலையும் எப்பிடி லாபம் பாக்கலாம் என்டு யோசிக்கிறதுதான் எங்கட பரம்பரைக் குணம். எந்தக் கொரோனா வந்தாலும் . இந்தப் பரம்பரைக் குணத்தை மாத்தேலுமோ? எதுக்கு இப்பிடி பட்சி நீட்டி முழக்குதெண்டு யோசிப்பீங்கள். எல்லாத்துக்கும் ஒரு காரணமிருக்கு.

இப்ப முடக்கத்தை எடுத்த உடன எல்லா டிப்பாட்மெண்டும் முழுமூச்சா இயங்கத் தொடங்கியிருக்கு. என்னதான் கொரோனா குறைஞ்சிட்டுதெண்டு நம்பவைச்சு, முடக்கத்தை எடுத்தாலும் எப்பவும் கொரோனா முந்தினமாதிரி மூசிக்கொண்டு பரவும் எண்ட பயம் எல்லாருக்கும் இருக்கு. அதால எங்கையும் புதிசா கொரோனாக் கொத்தணியள் வந்திடக்கூடாதெண்டு, எல்லாத் திணைக்களங்களிலையும் வேலைசெய்யிற ஆக்கள் பாவிக்கிறதுக்கெண்டு மாஸ்க், சனிட்ரைசர் எல்லாம் குடுபடுகுது. அதுகளை அந்தத் திணைக்களத்துக்கு கீழஉள்ள ஒப்பீஸுகளுக்கு அனுப்பி, அங்க உள்ளவைக்கு பிரிச்சுக் குடுக்கச் சொல்லித்தான் ஓடர்.

முக்கியமா அந்த மாசத்தில எத்தினை வேலை நாள் வருகுதோ, அதுக்கு ஏத்தபடி மாஸ்க் குடுக்கவேணும். வே லை செய்யிற ஆக்கள் மாஸ்க் இல்லை எண்டு சாட்டுச் சொல்லி வீட்ட நிக்கக்கூடாது எண்டுதான் இப்பிடி ஏற்பாடு போல. அதால எல்லாரும் வேலைக்கு போகேக்க தங்கட ஒப்பீஸில தந்த மாஸ்கை போட்டுக் கொண்டு போகலாம். அதால கொரோனா பரவுறதை ஓரளவுக்கு ஒப்பீஸ்வழியளில குறைக்கலாம். திட்டமெல்லாம் நல்லம்தான். ஆனா அதை நடைமுறைப்படுத்துறதுதான் சிக்கல்.

அப்பிடியென்ன சிக்கலெண்டு சிலர் கேக்கக் கூடும். எல்லாம் மேல சொன்னமாதிரி 'கொரோனாவை வைச்சும் இலாபம் பாக்க வெளிக்கிட்ட' சிலராலதான் இந்தச் சிக்கல். சில ஒப்பீஸ்களுக்கு பொறுப்பாய் இருக்கிறவை மற்ற ஊழியர்களுக்கு குடுக்கச் சொல்லி வாற மாஸ்க், சனிட்டைசர் எண்டு எல்லாத்தையும் தாங்களே ஆட்டையைப்போட்டு விடுகினம். அப்பிடி மற்ற உத்தியோகத்தர்மாருக்கும் குடுக்கச் சொல்லி வாற மாஸ்க் எல்லாத்தையும் காதும் காதும் வைச்சமாதிரி அமுக்கி, அதை மலிவா தங்களுக்கு தெரிஞ்ச கடையளில விக்கவும் செய்யினமாம். சில பொறுப்பான அதிகாரியள் வீடுகளில கொண்டுபோய் பதுக்கியும் வைச்சிருக்கினம். ஆனால், எல்லாருக்கும் சரிவரப் பிரிச்சுக் குடுத்திட்டம் எண்டு மேலிடங்களுக்கு கணக்கு வேற காட்டுகினம். ஆரும் விசயம் தெரிஞ்சவை தங்கட கோட்டாவுக்கான மாஸ்க், சனிட்டைசர் எங்க எண்டு கேட்டால், 'மேலிடம் அனுப்பேலை' எண்டு சிம்பிளா ஒரே சொல்லில சொல்லி அனுப்புகினம்.

இதுகளை எல்லாம் ஒரு ஒழுங்குக்க கொண்டு வந்து, எல்லா உத்தியோகத்தர்மாருக்கும் இப்பிடி மாஸ்க், சனிட்டைசர் எல்லாம் அனுப்பப்படுகுது எண்ட தகவலை சரிவரத் தெரியப்படுத்திறதோட, அப்பிடி அனுப்பிறதுகள் எல்லாம் ஒழுங்காய் போய்ச் சேருதோ எண்டும் உரியவை இனியாவது கண்காணிப்பினமோ?

கொரோனாவைவிட பொல்லாத கிருமியளோட தான் நாங்கள் வாழுறம் போல...!



- பட்சி

# அரசை மக்கள் விரட்டும் காலம் வெகுவிரைவில்

## அமைச்சர் அமரவீர 'சேம்சைட் கோல்' அடிக்கிறார்



**கொழும்பு, ஒக்.15**

**இப்போது தவறுகளைத் திருத்திக் கொள்ளாது போனால், அடுத்த மூன்று ஆண்டுகளில் மக்களால் இந்த அரசு விரட்டியடிக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகள் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. மக்கள் அரசைக் கடுமையாக விமர்சிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு மக்களைக் கடுமையாக பாதித்துள்ளமை உண்மையே. எந்தக் காரணம் கூறியும் இதனை எம்மால் நிராகரிக்க முடியாது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடி நிலைமையை நாடு எதிர்கொண்டிருந்த நிலையில், எதிர்பாராத விதமாக கொரோனாத் தாக்கத்தால் மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கை எதிர்பார்த்திருந்த வருவாய்கள் அனைத்துமே முடக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை மூலமாக வருடாந்தம் கிடைக்கும் வருமானம் முழுமையாக இல்லாது போயுள்ளது. ஏற்றுமதி மூலமாக கிடைக்கும் வருமானம் இல்லாது போயுள்ளது. மேலும் பல வழிகளில் எமக்கு கிடைக்கவிருந்த முதலீடுகள் இல்லாது போயுள்ளன. எனவே இதுவே அரசுக்கு பெரிய நெருக்கடி நிலைமைகளை உருவாக்கியுள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சில வியாபாரிகள் செயற்படும் விதம் மிகவும் மோசமானதாகும். வியாபாரிகளின், இறக்குமதியாளர்களின் நோக்கங்களுக்காக தேவைக்கேற்ப விலை அதிகரிப்பை அனுமதிக்க முடியாது.

அரசு இந்த விடயங்களை வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டு மட்டுமே இருக்க முடியாது. அரசு தலையிட்டு தீர்மானம் எடுக்க வேண்டும். இந்த இரண்டு ஆண்டுகளில் நாம் விட்டுள்ள தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து, சுய கணிப்பை செய்து கொண்டு உடனடியாக திருத்திக்கொள்ள வேண்டிய விடயங்களில் கவனம் செலுத்தி, மக்கள் மீதான சுமையைக் குறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் அடுத்த மூன்று ஆண்டுகளில் எமது அரசை மக்களே விரட்டியடித்து விடுவார்கள். கடந்த நல்லாட்சி அரசு மீது மக்கள் வைத்த நம்பிக்கை சுக்குநூறாக சிதறும் விதத்தில் அப்போதைய ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் காரணமாகவே, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இப்போது தன்னிச்சையாக எடுக்கும் தீர்மானம், தவறான முடிவுகள், நாட்டுக்கு அவசியம் இல்லாத உடன்படிக்கைகள், மக்களின் நலன்களில் கவனம் செலுத்தாது எடுக்கும் தீர்மானங்கள் காரணமாக எமக்கும் அந்த நிலைமை ஏற்படலாம் - என்றார். (ஒ-4)

## பொட்டாசியம் சேதனப்பசளை மாவட்டங்களுக்கு விநியோகம்

கொழும்பு, ஒக்.15

அரச நிறுவனமொன்றால் கொள்வனவு செய்யப்பட்ட பொட்டாசியம் க்ளோரைட்டு சேதனப் பசளை, மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுரதபுரம், குருநாகல், புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் விவசாய சேவை மையங்களுக்கு பசளை விநியோகிக்கப்பட்டுள்ளது.

30 ஆயிரம் மெற்றிக் தொன் பசளை லித்வேனியாவிலிருந்து கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது. அந்தப் பசளையே மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## மாந்தை மேற்கு சபைக்கு புதிய உறுப்பினர் தெரிவு



மன்னார், ஒக்.15

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் புதிய உறுப்பினராக மோகனராசா மேரி கொன்சி நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான முத்துசாமி முகுந்த கஜன் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இருந்த ஆசீர்வாதம் சந்தியாகு உயிரிழந்த நிலையில், மேரி கொன்சி சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ஐ-19)



பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணியம் சுவாமிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. (ஐ)

## முல்லைத்தீவில் முற்றுப்பெறாத வீடுகளை கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்

### பிரதமருக்கு செல்வம் எம்.பி. கடிதம்

முல்லைத்தீவு, ஒக்.15



முல்லைத்தீவு மாவட்டத்தில் முற்றுப்பெறாத வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு விரைவாக ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று கோரி பிரதமருக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் 2019 ஆம் ஆண்டு வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகளாக அடையாளம் காணப்பட்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபை மூலமாக வழங்கப்பட்ட வீட்டுத்திட்டமானது முற்றுப்பெறாமல் நிலுவையில் இருந்து வருகிறது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு ஓர் அத்தியாவசிய தேவையாக உள்ளது. இந்த வீட்டுத் திட்டம் ஒரு வருடத்துக்குள் முடிவுக்கு வரவில்லை என்றால் இதற்கு யார் பொறுப்பு? இந்த மக்களின் நிலை என்ன? இன்று இந்த மக்கள் மனதில் பல கேள்விகளுடன் வாழ்ந்துவருகின்றனர்.

எனவே இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏழை மக்களின் பிரச்சினைக்கு முடிவு காணப்படல் வேண்டும். இந்த பிரச்சினையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமல்ல ஏனைய மாவட்டங்களான மன்னார் வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருந்துவருகின்றது - என்றுள்ளது. (ஐ-213)

## சர்வதேச தன்னாதிக்க வாரத்தை மீனவர்களால் நினைவுகூர முடியவில்லை

### வட மாகாண மீனவ இணையச் செயலாளர் ஜி.சங்கர் தெரிவிப்பு

மன்னார், ஒக்.15

சர்வதேச தன்னாதிக்க தினத்தை கொண்டாடும் இந்த வேளையில் மீனவ சமூகம் மற்றும் இலங்கை வாழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். இந்த நிலையிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டுமானால் அரசே இதற்கு வழி சமைக்க வேண்டும் என்று வட மாகாண மீனவ இணைய செயலாளர் ஜி.சங்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தன்னாதிக்க தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை உலக தன்னாதிக்க வாரமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த உலக தன்னாதிக்க வாரத்திலே எமது மீனவ சமூகமும் இலங்கை வாழ் மக்களும் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டு வரும் விலை அதிகரிப்பால் எவ்வாறு வாழப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியாக மாறிவிட்டது.

அண்மையில் வல்வெட்டித்துறையிலும் பருத்தித்துறையிலும் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை மட்டுமல்ல எமது மீனவர்களின் வலைகளையும் நாசம் செய்துள்ளன. இதனால் பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது நாட்டில் விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ளது. முன்பு ஆயிரம் ரூபாவுக்கு வாங்கிய ஒரு வலைத்துண்டு தற்பொழுது இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது. அத்துடன் எரிபொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. உலக உணவு தன்னாதிக்க வாரத்மதை கிழ்ச்சியுடன் கொண்டாடும் தன்மைக்கு வழி சமைக்க வேண்டும் என்று அரசை வேண்டி நிற்கின்றேன் - என்றார். (ஐ-60)



## இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்கள், குடும்பத்தினரால் கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொண்டு செயற்படுவீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணம் லாபம் தரும்.

**இடபம்:** பணியிடத்தில் உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். பணியிட மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பேச்சிலும் செயலிலும் இன்று மிகுந்த கவனம் தேவை.

**மிதுனம்:** எவரைப் பற்றியும் எவரிடமும் புறம்கூற வேண்டாம். உங்கள் வேலை உண்டு என்றிருந்தால் பிரச்சினை இருக்காது. முன்னேற்றம் ஏற்படும். சுபவிடயம் நடைபெறும்.

**கடகம்:** குடும்ப ஒற்றுமையைக் காக்க எடுத்த முயற்சிகள் கைகூடும். முன்பு கண்ட நல்ல கனவுகள் இப்போது மெய்ப்பட ஆரம்பிக்கும். கோபதாபங்களைக் குறைத்து மற்றவர் அன்புக்குப் பாத்திரமாவீர்கள்.

**சிம்மம்:** பிரிந்தவர்களை சேர்த்து வைக்க எடுத்த முயற்சி பலிக்கும். சம்பாதிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பொதுச்சேவை செய்வீர்கள். குழந்தைகளின் செயல் உங்களை சந்தோசப்படவைக்கும்.

**கன்னி:** தவறான பாதைக்கு அழைக்கும் நண்பர்களை விலக்குங்கள். தொழில், பணியில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். கலைத்துறையில் ஈடுபாடு ஏற்படும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு இல்லாமல் நண்பர்கள் உங்களுக்கு நன்மை செய்வர். உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்களின் ஒத்துழைப்பு அதிகமாகும். சகோதரர்களின் பாராமுகம் வருத்தமளிக்கும்.

**விருச்சிகம்:** பணியிட வளர்ச்சி கூடும். வழக்குகள் சாதகமாகும். பயம் தீரும். நீங்கள் நினைத்த விஷயம் ஒன்று நிறைவேற வாரிசுகள் உதவுவர். கவலை தீரும்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் ஆதரவு பிரச்சினைகளை குறைக்கும். உங்களின் செயல் பெற்றோருக்கு நெகிழ்ச்சி அளிக்கும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களுடன் ஒட்டுதல் ஏற்படும்.

**மகரம்:** களைப்பு காரணமாக கடமை தவற வேண்டாம். அக்கம்பக்கத்தினர் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள். பண விஷயத்தில் நெருங்கியவர்களிடமும் கவனம் தேவை.

**கும்பம்:** பிறருக்கு நன்மை செய்வதாக நினைத்து சங்கடத்தில் மாட்ட வேண்டாம். தவறு ஒன்றைச் செய்து அதிலிருந்து மீளுவீர்கள். மனப் பயம் நீங்கும்.

**மீனம்:** மிக நெருக்கமான ஒருவரின் சிரமம் பற்றிக் கவலை தீரும். மனக்குறை ஒன்று நீங்கும். சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படுவீர்கள். மற்றவருக்கு கற்பிப்பதன் மூலம் வருமானம் உண்டு.

# காலாவதியான மருந்தை வழங்கிய மருத்துவமனைக்கு எதிராக வழக்கு



**வவுனியா, ஒக். 15**

**காலாவதியான மருந்தை நோயாளிக்கு வழங்கிய குற்றச்சாட்டில், வவுனியாவில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு எதிராக நுகர்வோர் அதிகாரசபையால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.**

வவுனியா குடியிருப்பு குள வீதியில் அமைந்துள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவை சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவர், சுகவீனம் ஏற்பட்ட நிலையில் குறித்த மருத்துவமனைக்கு சென்று நேற்றுமுன்தினம் சிகிச்சையை முன்னெடுத்திருந்ததுடன், மருந்தையும் பெற்றுச் சென்றிருந்தார்.

இந்த நிலையில் அந்த மருந்தை நேற்றுமுன்தினம் இரவு அவர் பயன்படுத்திய நிலையில் சுகவீனம் ஏற்பட்டதுடன் உடலில் சில மாற்றங்களையும் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த மருந்துகளை சோதித்து பார்த்தபோது ஒரு மாதத்துக்கு முன்பாகவே அவை காலாவதியாகியுள்ளமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து நேற்று குறித்த மருத்துவமனைக்குச் சென்ற அவர் அங்கு கடமையில் இருந்தவர்களிடம் விடயத்தை தெரியப்படுத்தியதுடன், தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பாக மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பாவனையாளர் அதிகாரசபையின் அதிகாரிகள் காலாவதியாகிய சில மருந்துகளை மீட்டதுடன், மருத்துவமனைக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்துள்ளனர். (ஐ-110)



## இந்திய மீனவரின் வருகையைக் கட்டுப்படுத்த அரசு இதுவரை உரிய தீர்வை வழங்கவில்லை

*வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் தெரிவிப்பு*

மன்னார், ஒக்.15

இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த நாங்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தபோதும் அரசு இதுவரை உரிய தீர்வை வழங்கவில்லை என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் என்.எம்.ஆலாம் தெரிவித்துள்ளார்.

உலக உணவு தன்னாதிக்க வாரத்தையொட்டி மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியத் துணைத்தூதுவரை யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் மீனவதலைவர்கள் சென்று சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர். மீனவ தலைவர்களாகச் சென்றவர்கள் அவரிடம் எதைக் கூறினார்கள் என்று இன்றுவரை தெரியவில்லை.

எனினும், பாதிக்கப்படுவது மீனவர்கள். மீனவர்களின் பாதுகாப்பையும், மீனவர்களின் குடும்பங்கள் படும் துன்பங்களையும் எவரிடம் தெரிவிப்பது என்று தெரியாமல் உள்ளது.

அரசு செவிடன் காதில் ஊதிய சங்கு போல் நாங்கள் பல்வேறு விடயங்களை எடுத்துக்கூறியும், இன்றுவரை அதனை கேட்பதாகவும் இல்லை. இலங்கைக்கான வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பது சாதாரணமான விடயமாக உள்ளது.

சீனாவுக்கு விற்கப்பட்டமை போன்று வடபகுதியிலும் ஏதாவது பகுதிகள் இந்தியாவுக்கு விற்கப்படவுள்ளனவா? என்ற சந்தேகம் எழுகின்றது.

இதனால் வட பகுதி மீனவர்கள் அல்லது மக்கள் எதை இழக்க போகிறார்கள் என்கிற கேள்வியும் எழுந்துள்ளது.

கடலில் எரிபொருள்கள் இருப்பதாகக் கூறப்பட்டு, அது கண்டுபிடிக்கப்பட்டு, விற்கப்பட்டால் மன்னார் தீவில் உள்ள மக்கள் இடம் பெயர வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

அதன் உண்மைத்தன்மை என்ன?அரசு ஏன் குறித்த விடயத்தை தெரிவு படுத்தவில்லை? மேலும் தற்போது நாட்டில் பொருள்களின் விலை என்றும் இல்லாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ஐ-56)

## தீக்காயத்துக்குள்ளான ஒரு பிள்ளையின் தாய்

தீக் காயங்களுக்கு இலக்கான நிலையில் ஒரு பிள்ளையின் தாய் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த குடும்பப் பெண் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணே இவ்வாறு தீக்காயங்களுக்கு இலக்கானார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

## இராணுவத்தினரால் வீடு கையளிப்பு

கிளிநொச்சி,ஒக்.15

கிளிநொச்சியில் பொருண்மியம் நலிந்த குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்டிருந்த வீடு இராணுவத்தினரின் நிதி மற்றும் ஆளணி உதவியுடன் முழுமைப்படுத்தப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு இராணுவ தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பிலபிரிலிய கலந்துகொண்டு வீட்டை கையளித்ததுடன், அன்பளிப்பு பொருள்களையும் வழங்கியிருந்தார்.

தொடர்ந்து மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

இதேவேளை - குறித்த நிகழ்வில் 72 ஆவது இராணுவ தினத்தையொட்டி 20 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஐ-6)

# தனிநபர் மாதாந்தச் செலவு இலங்கையில் 5,353 ரூபா

கொழும்பு, ஒக்.15

இலங்கையில் தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளுக்காக மாதாந்தம் குறைந்தது 5 ஆயிரத்து 353 ரூபா தேவை என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்துக்கான தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தத் தரவுகள் பெறப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்களின் மாதாந்த குறைந்தபட்ச செலவு 5 ஆயிரத்து 810 ரூபாவாகும். மிகக் குறைந்தளவு வாழ்க்கைச் செலவைக் கொண்ட மாவட்டமாக மொனராகலை பதிவுவாகியுள்ளது. அங்கு மாதாந்தச் செலவு 5 ஆயிரத்து 40 ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ-இ)

# வங்கி அட்டை இலக்கம் மூலம் நூதனமான முறையில் மோசடி!

## 23 வயது இளைஞர் கைது

கொழும்பு, ஒக்.15

வங்கி அட்டை இலக்கங்களைப் பயன்படுத்தி திட்டமிட்டுப் பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறுபட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நபர்களின் வங்கி அட்டை இலக்கங்களைப் பயன்படுத்தி இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச வங்கி ஒன்றின் வங்கி அட்டை இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக முகாமையாளர் பதிவு செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குருநாகலைச் சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இன்ஸ்டாகிராம் குழு ஒன்றின் உதவியுடன் 3 நாள்களில் 29 பேரின் வங்கி அட்டைகளில் 114 முறை இணையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர் என்று தெரிகின்றது. ஒருநாளில் சுமார் 8 லட்சத்து 71 ஆயிரம் ரூபாவரை மோசடி செய்துள்ளார்.

இரவு வேளைகளில் நாடு முழுவதும் வங்கிக் கணக்குகளில் சூட்சுமமாக ஊடுருவி இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து பல்வேறு தொழில்நுட்ப இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேநகபரின் இன்ஸ்டாகிரம் குழு ஊடாக வெளிநாட்டு வங்கிக் கணக்குகளிலும் மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த இன்ஸ்டாகிராம் குழுவை இனங்காண்பதற்கான பரந்துபட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று குற்றப் புலானாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(எ-இ)

## வெளிநாடுகளுக்குச் செல்ல முண்டியடிக்கும் இலங்கையர்

கொழும்பு, ஒக்.15

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவைப் பிரிவு கடந்த 11ஆம் திகதி முதல் மீள இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் பெருமளவான மக்கள் அங்கு சேவைகளைப் பெறுவதற்காக தினமும் காத்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகுதிச் சான்றிதழ் போன்ற சேவைகளைப் பெறுவதற்காகவே பெருமளவானோர் திரள்கின்றனர் என்று தெரியவருகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும் எண்ணிக்கையானோர் வெளிநாடு செல்வதற்கு முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். அதற்காகவே தூதரக சேவைகளைப் பெறுவதற்கு தினமும் பெருமளவானோர் திரள்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

(எ-இ)

# எல்.பி.எல். தொடரில் ரோஹித ராஜபக்ச?



கொழும்பு, ஒக். 15

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகன் ரோஹித ராஜபக்ச விளையாட வாய்ப்புக்கள் உள்ளன என்று தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில், அவற்றை ரோஹித மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

'கிரிக்கெட் நிர்வாகத்தில் ஈடுபட எனக்கு எந்த எண்ணமும் இல்லை, எல்.பி.எல் அணிக்காக விளையாடும் எண்ணமும் இல்லை. இந்தமாதம் 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடக்கும் ரக்பி செவன்ஸ் போட்டிக்கு தயாராகி வருகிறேன். தற்போது நான் எங்கள் பழைய தோமியன் அணியுடன் கிரிக்கெட் விளையாடுகிறேன்' -என்றார்.

(ம)

# மத்தியஸ்தர் சபை அமர்வு ஆரம்பம்

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தா ஆரம்பப் பாடசாலையில் சபை அமர்வுகள் நடைபெறவுள்ளன என்று சபையின் தவிசாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

மேலும், சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் பிணக்குகளுடன் தொடர்புடைய இரு தரப்பினர் மட்டும் வருகை தருமாறும் அறிவித்துள்ளார்.

(ஒ-ரி1)

# சௌபாக்யா உற்பத்திக் கிராமம் அமைச்சின் குழு நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சௌபாக்யா உற்பத்திக் கிராம வேலைத் திட்டங்களை, அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஆராயவுள்ளனர்.

சமுர்த்தி, நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி, மனைப் பொருளாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் திட்டங்களைப் பார்வையிடவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரும் அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர், பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம், நெடுங்குளம் பற்றிக் ஆடைத் தொழிலகம் மற்றும் பாசையூர் இறங்குதுறை ஆகியவற்றைப் பார்வையிடுவர்.

மாலை 4.30 மணிக்கு வேலணை மண்கும்பான் முருங்கை உற்பத்தி மற்றும் முருங்கை பவுடர் தயாரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டு பயனாளிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

17 ஆம் திகதி காலை 9 மணிக்கு அரியாலை மணியம் தோட்டத்தில் உள்ள பற்றிக் உற்பத்தி நிலையத்தையும், முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு, பிரான்பற்று நல்லெண்ணெய் உற்பத்தி நிலையத்தையும், முற்பகல் 11.15 மணிக்கு இளவாலை வடக்கு மேற்கில் உள்ள பனை உற்பத்தி நிலையத்தையும், பிற்பகல் 1.30 மணிக்கு உடுப்பிட்டி இமையாணன் பனைசார் உற்பத்தி நிலையத்தையும், பிற்பகல் 2.15 மணிக்கு பருத்தித்துறை சிங்கநகர் பிரிவில் உள்ள வெல்ல உற்பத்தி நிலையத்தையும், பிற்பகல் 3.45 மணிக்கு குடத்தனையில் அமைந்துள்ள சத்துணவு மா உற்பத்தி நிலையத்தையும் பார்வையிடுவர்.

மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தென்மராட்சி மட்டுவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் மற்றும் வரணி வடக்கில் உள்ள பனம்பொருள் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை பார்வையிடுவர்.

உற்பத்தியாளர்கள் மற்றும் பயனாளிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

(ஓ-4-9)

# இலங்கையில் எல்லைமீறும் சீன ஆதிக்கம்



கொழும்பு, ஒக். 15

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் எல்லைமீறிப் போகின்றது. கொழும்புத் துறைமுகநகரைச் சூழவுள்ள காணிகளை விற்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுநடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் எல்லைமீறிப் போகின்றது. துறைமுக நகரம் அமைக்கப்பட்டது மட்டுமல்லாமல், அதனைச் சுற்றியுள்ள 13 ஏக்கர் காணியையும் விற்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என்று தகவல் கிடைத்துள்ளது. ஜனாதிபதி மாளிகையும் அந்தப்பகுதியில்தான் உள்ளது. தற்போதைய ஜனாதிபதி மாளிகைதான் பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில் ஆளுநர் மாளிகை. எனவே, சீன ஆளுநர் ஒருவரை நியமித்து, நாட்டை, சீனாவின் காலனித்துவ நாடாக்கிவிடுங்கள். மறைமுகமாக செய்வதைவிட, நேரடியாகவே செய்துவிடுவது மேல்.

ஆள முடியாவிட்டால் போய்விடுங்கள். எதிரணிக் கூட்டணியில் திறமையானவர்கள் உள்ளனர். தவறிழைத்தவர்கள் இன்னும் எம்முடன் இல்லை. சரியானவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் -என்றார்.

(ம-44)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பச்சையால் மெத்தனம் வேண்டாம்!

**கொ**ரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை பச்சை வலயத்துக்கு முன்னேறியுள்ளது. அதாவது கொரோனாப் பேரலை இலங்கையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது அல்லது கொரோனாவில் இருந்து மீளக்கூடிய நிலையில் இலங்கை உள்ளது (?) என்பதைத்தான் இந்தப் பச்சை வெளிப்படுத்துகின்றது. ஆனால், அவ்வாறான நிலையில் தான் உண்மையாகவே நாடு உள்ளதா என்பதை நாம் சுயபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.


இலங்கை பச்சை வலயத்துக்குள் வந்துவிட்டதை நாம் மெத்தனப்போக்குடன் எடுத்துவிடக்கூடாது. சுமார் 40 நாள்களாக இந்த நாடு முடக்கப்பட்டிருந்ததன் (?) விளைவாக இந்தப் பச்சை வலயத்துக்குள் இலங்கை சென்றிருக்கலாம். ஆனால், அதைவிடப் பல்வேறு விரும்பத்தகாத காரணங்களையும் இந்த 'வலய முன்னேற்றத்துக்கு' காரணமாக நாம் குறிப்பிட வேண்டும்.

இலங்கையில் தேசிய அளவில் முன்னெடுக்கப்பட்டு வந்த பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளின் எண்ணிக்கைகள் குறைந்துள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனைகள் குறைக்கப்பட்டால் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடை யும் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த உண்மை. அத்துடன் தொற்றாளர்கள் தொடர்பில் இலங்கை அரசு வெளிப்படுத்தும் அறிக்கைகளின் அடிப்படையிலேயேதான் இலங்கை பச்சை வலயத்துக்குள் முன்னேற்றம் கண்டுள்ளது. இதுவொன்றும் பக்கச்சார்பற்ற சர்வதேசக் கணக்கெடுப்பையோ அல்லது சர்வதேசத் தரவுகளையோ முற்றுமுழுதாக வைத்து எடுக்கப்பட்ட முடிவல்ல. ஆக, இதில் பெருமைப்பட ஒன்றும் இல்லை. ஆனால், ஏதோவொரு முன்னேற்றம் உள்ளது என்பதும் (சிறு) உண்மை.

உரிய முறையில் அதிகளவு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டால் இன்னும் ஏகப்பட்ட தொற்றாளர்கள் சமூக மட்டத்தில் சுற்றித்திரிவார்கள். எவராலும் மறுத்துரைக்க முடியாத அறுதியான – உறுதியான விடயம் இது. இன்னும் சமூகத்தொற்று என்ற நிலையில் இருந்து நாடு விடுபடவில்லை. ஆபத்து அகலவில்லை. அவ்வாறு இருக்கையில் எந்த அடிப்படையில் நாம் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும், திருப்திப்பட முடியும்?

நாட்டில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் திட்டங்கள் துரித கதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எனவே அனைத்து மக்களுக்கும் முழுமையாகத் தடுப்பூசி ஏற்றிமுடிக்கும் வரையிலாவது நாம் 'சுதந்திரப் பறவைகள்' போக்கைக் கைவிட வேண்டும். எம்மை நாமே இயலுமான வரையில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

முடக்க நீக்கம் அறிவிக்கப்பட்ட பின்னர் முற்றுமுழுதாக இயல்பு நிலைக்குள் நாடு வந்துவிட்டதைப்போன்று அனைவரும் நடந்துகொள்கின்றனர். வீதிகள் வாகனங்களால் நிரம்பியுள்ளன. இவையெல்லாம் நல்ல அறிகுறிகளல்ல. இதற்கு முன்னர் இருந்த இதே அசமந்தப் போக்கால்தான் 40 நாள்கள் முடக்கத்தை எதிர்கொண்டோம். தற்போது அதேபோன்றதொரு அசமந்தத்தை அவதானிக்க முடிகின்றது. இன்னும் ஒரு முடக்கம் வெகு தூரத்தில் இல்லை. பச்சையால் மெத்தனம் வேண்டாம். ஆபத்து இன்னும் அருகில்தான்.




# வடக்கு ஆளுநர் நியமனம்; பின்னணியில் இந்தியா?

### சந்தேகம் வெளியிடுகிறார் வசந்த



**கொழும்பு, ஒக்.15**

**வ**டக்கு மாகாணத்தில் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியாவின் செல்வாக்கு உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக பி.எஸ்.எம்.சார்ள்ஸ் சிறப்பாகவே சேவையாற்றினார். அவரை மாற்றுவதற்கான எந்தத் தேவையும் இருக்கவில்லை.

தற்போது வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் திடீர் மாற்றம் கொண்டுவரக் காரணம் என்ன?. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்த ஜீவன் தியாகராஜாவை வடக்கு ஆளுநராக நியமிப்பதற்கு விசேட காரணங்கள் எவையும் இருக்க முடியாது.

இவ்வாறான திடீர் தீர்மானங்களால் வடக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் அரசியல் நிலைத் தன்மை பாதிக்கப்படலாம் - என்றார். (எ-இ)

# காலணிகளுடன் சந்நிதிக்குள் போகவில்லையாம் பொலிஸ்!

கொழும்பு, ஒக்.15

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தின் காலணியுடன் பொலிஸ் அதிகாரி சென்றார் என்று சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காலணியுடன் நிற்கும் ஒளிப்படம் வெளியாகிச் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும்போது பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அந்தப் பொலிஸ் அதிகாரி ஆலய நுழைவாயிலில் தமது கடமையில் ஈடுபட்டிருந்தார். எமது அதிகாரிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அனைத்து மதங்களையும் கௌரவத்துடன் மதிப்பவர்கள்.

பொலிஸ் அதிகாரிகள் கடமையில் இருக்கும் போது மேல் சட்டையைக் கழற்றக்கூடாது. ஆயினும் நல்லூர் ஆலயத்துக்குள் பொலிஸ் அதிகாரிகள் செல்லும்போது மேல் சட்டையைக் கழற்றிவிட்டே செல்கிறார்கள். இது இந்து மதத்துக்கு பொலிஸார் வழங்கும் கௌரவம். என்றார்.

அதேவேளை, பொலிஸ் அதிகாரி காலணியுடன் நின்ற பகுதி, காலணியுடன் செல்வதற்கு அனுமதிக்கப்படாத பகுதி என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (எ-இ)

# அஞ்சலியைத் திரித்துக் கூறியதால் விசாரணை

கொடிகாமம், ஒக்.15

சாவகச்சேரி பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண அஞ்சலி நிகழ்வொன்றை தியாகி திலீபனுக்கு நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டதாக சிலர் திரித்துக்கூறியதால் விசாரணை ஒன்றை எதிர்கொண்டோம் என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

உறுப்பினர் ஒருவரின் மாமி உயிரிழந்ததை அடுத்து கடந்த மாதம் நடந்த சபை அமர்வில் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது சபையில் நித்திரையில் இருந்த எவரோ ஓர் உறுப்பினர் திடீரென விழித்து தியாகி திலீபனுக்கு நினைவேந்தல் செய்யப்பட்டது என்று நினைத்துவிட்டார் போலும்.

இந்த அஞ்சலி நிகழ்வைத் திரித்து புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனால் விசாரணை ஒன்றை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது என்று தவிசாளர் அமர்வில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-159)

# நினைத்தது நிறைவேற கேதார கௌளரி விரதம்



எம்.பி. அருளானந்தம்.

நினைத்ததைத் தருகின்ற சக்தி விரதங்களுள் மகிமை வாய்ந்த விரதம் கேதார கௌளரி விரதமாகும். இது இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள், சதுர்த்தசித் தினத்திலாவது கேதாரநாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம்.

சர்வமும், சிவமயம் என்ற கொள்கையுடையவர் "பிருங்கி" என்னும் நாமத்தையுடைய முனிவர் திருக்கயிலாயத்தில் சிவனை வழிபடுவதற்காக சென்றிருந்த வேளை, அங்கே சிவன் தனித்திருக்காது பார்வதி பரமேஸ்வரராகக் காட்சியளிப்பதைக் கண்டார். சிவனை மட்டும் எப்பொழுதும் வணங்கி வரும் பிருங்கி முனிவர், பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். பிருங்கி முனிவர் சிவபெருமானை மாத்திரம் வலம்வந்து வணங்கி நின்றமையும், உலக மாதா பார்வதிதேவியைப் புறக்கணித்தமையும் அவரை ஆத்திரம் கொள்ளச் செய்தன. இதனால் பார்வதிதேவி பிருங்கி முனிவரை சக்தியற்றவராகவும், ஆற்றலில்லாதவராகவும் ஆக்கி விட்டார்.

ஆற்றலை இழந்த முனிவர் மூர்ச்சையானார். முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் இறைவனே ஊன்றுகோல் கொடுத்து அவரை இருப்பிடம் சேர்த்தார். பார்வதி தேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று தாம் வேறு வேறாக அன்றி இறைவனின் இடப்பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால், இத்தகைய நிலைமை வந்திருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வாம பாகத்தை வேண்டித் தவம் இயற்றினார்.

கௌளதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாமபாகத்தில் அமர்த்திக் கொண்டார். இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆயினார். பாதி ஆண், பாதி பெண் சிவமூர்த்தமே அர்த்தநாரீஸ்வரர் வடிவம் ஆகும்.

அப்பொழுது இறைவி, இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்திரப் பேற்றையும், சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று தேவரீர் திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரிய வேண்டும் என்று வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்தநாரீஸ்வரராகத் திருக்கயிலாயத்துக்கு எழுந்தருளினார்.

பிருங்கி முனிவரும் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து பழைய உருவைப் பெற்றார். சிவமும், சக்தியும் ஒன்றென உலகத்தவர்க்குக் காட்டவே இந்தத் திருவிளையாடல் நடந்தது.

குடும்பத்தில் கணவனும், மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ வேண்டியே கேதாரகௌளரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அடுத்து திருமண மாகாத கன்னிப் பெண்களும் தமக்கொரு நல்ல தலைவன் கிடைக்க வேண்டுமென்று நினைத்து அனுஷ்டித்தால் திருமணம் நிறைவேறுகிறது. குடும்பம் சீரோடும், சிறப்போடும், செழிப்போடும், சுகத்தோடும், அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடு மிகவும் அவசியமானதாகும்.







கரிகணனின்
விஜயதசமி
நல்வாழ்த்துக்கள்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
21 வருட அனுபவம்
இல.672B, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2717 | 18

(சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)

# மனித நேயம் மலரட்டும்!

இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். ஒருவகையில் இது மனித நேயத்தை தட்டியெழுப்புகின்ற ஒரு தினம் என்று கூறினும் மிகையாகாது. இந்த நாளிலே இதன் தாற்பரியம் பற்றி சற்றே சிந்திப்பது மிகவும் பொருத்தமுடையதாயிருக்கும்.

வெள்ளைப்பிரம்பு என்பது கண் பார்வையற்றவர்கள் சுயமாக நடமாடுவதற்குப் பயன்படும் ஒரு சாதனமாகும். பல நூற்றாண்டுகளாக விழிப்புலனற்றவர்கள் சுயமாக நடமாடும்போது ஒரு தடியை அல்லது பிரம்பைப் பயன்படுத்தியே வந்தார்கள். எனினும், இருபதாம் நூற்றாண்டிலேயே அதற்கு வெள்ளை நிறமூட்டப்பட்டு, வெள்ளைப்பிரம்பு என்ற நாமமும் சூட்டப்பட்டு, விழிப்புலனற்றவர்களின் அடையாளச் சின்னம் என்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

### சட்ட அங்கீகாரம்

அமெரிக்க அரிமாக் கழகத்தினரின் அரும் முயற்சியாலேயே வெள்ளைப் பிரம்பு விழிப்புலனற்றோரின் அடையாளச் சின்னமாக சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டிலே முதல்முதலாக வெள்ளைப்பிரம்பு தினம் அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டு இலங்கையிலே நடைபெற்ற அகில உலகப் பார்வையற்றோர் சம்மேளனத்தின் மாநாட்டிலே சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, உலகளாவிய ரீதியில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்தத்தினத்துக்கு சற்று முன்பின்னாகவோ அல்லது ஒக்ரோபர் 15 ஐ மையமாகக் கொண்டு அந்த வாரம் முழுவதுமாகவோ இந்தத்தினம், கடைப்பிடிக்கப்படும் வழக்கமும் உண்டு. முக்கியமாக இரண்டு நோக்கங்களை மையமாகக் கொண்டே வெள்ளைப் பிரம்பு தினம் பின்பற்றப்பட்டு வருகின்றது.



அவையாவன:-

1. வெள்ளைப் பிரம்பு பற்றியும் அதன் தாற்பரியங்கள் பற்றியும் பொது மக்களுக்கு அறிவுறுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் விழிப்புலனற்றோருக்கு பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
2. விழிப்புலனற்றோர் தொடர்பான மூட நம்பிக்கைகளைக் களைவதன் மூலமும் அவர்களுக்கான நலத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் அவர்களுக்கு நல்லதோர் வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

புகழ்பூத்த அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா, 2011 ஆம் ஆண்டு இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை அமெரிக்க விழிப்புலனற்றோர் தினமாக பிரகடனப்படுத்தினார். அமெரிக்காவில் ஒக்ரோபர் மாதம் முழுவதுமே வெள்ளைப் பிரம்பு தொடர்பாகவும் விழிப்புலனற்றோரின் சமத்துவம் தொடர்பாகவும் பல்வேறு நிகழ்வுகள், செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### தெரிந்துகொள்ளவேண்டியவை

இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்திலே நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டியவை:-

1. யாரேனுமொருவர் வெள்ளைப்பிரம்பினைக் கையில் பிடித்திருந்தால் அவர் ஒரு பார்வையற்றவர் அல்லது குறைந்த பார்வையுடையவர் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.
2. வெள்ளைப்பிரம்பு பார்வையற்றோரின் அடையாளச்சின்னமாக சர்வதேச ரீதியாகவும் சட்டரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அதன் உதவியோடு சுயமாக வீதியில் நடமாடுவதற்கு விழிப்புலனற்ற எவருக்கும் உரிமையுண்டு என்பதையும் மதித்து நடக்கவேண்டும்.
3. வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு வீதியில் முதலில் நடந்துசெல்லும் உரிமை, வீதியை முதலில் கடக்கும் உரிமை என்பன உண்டு என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

**இரண்டாக மடித்தல்**

**நான்காக மடித்தல்**

4. வெள்ளைப் பிரம்பை ஒருவர் இரண்டாக மடித்து வீதியின் குறுக்கே காட்டினால் அவர் வீதியைக் கடக்க முயல்கிறார் என்பதையும் நான்காக மடித்து உயர்த்திக் காட்டினால் அவர் யாதேனும் ஒரு வாகனத்தை மறிக்க முயல்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.
5. வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவர் யாதேனும் ஒரு உதவியை நாடினால் அல்லது அவர் ஓர் ஆபத்தான சூழ்நிலையில் இருந்தால் தயங்காமல் அவருக்கு உதவ முன்வர வேண்டும்.
6. இயல்பான சூழ்நிலையில் வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்வோருக்கு இடையூறு எதுவும் ஏற்படாதவாறு சக பாதசாரிகளும் வாகன ஓட்டிகளும் நடந்துகொள்ளவேண்டும்.

### தட்டி எழுப்புங்கள்

இந்த சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்திலே எம்முள் உறங்கிக் கிடக்கும் மனித நேயத்தை நாம் ஒவ்வொருவரும் தட்டியெழுப்பவேண்டும். இந்த மண்ணில் பிறந்த மனிதர்கள் அனைவரும் வாழப்பிறந்தவர்களே என்ற மகோன்னத உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் அதுவே இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தின் வெற்றியாக அமையும்.

**திருமதி. மோகனவதனி ரவீந்திரன்,**
**உப அதிபர்,**
**யா/மகாஜனக் கல்லூரி.**

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### எரிவாயு....

மேலும் அதிகரிக்கவேண்டியுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார், லிற்றோ நிறுவனத்தின் தலைவர் தெஷாரா ஜெயசிங்க.

எரிவாயு விலை உடனடியாகக் குறைக்கப்படும் என்று பொதுமக்களிடம் பொய்யான வாக்குறுதிகளை அளிக்க தேவையில்லை. எரிவாயுவுக்கு நிலையான விலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றோம்.

எனினும், குறுகிய காலத்துக்குள் எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிக்க வேண்டியிருக்கும். இல்லையென்றால், உலகச் சந்தையில் எங்களை நிலைப்படுத்துவது கடினம்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையை பொதுமக்களிடமிருந்து மறைக்கக் கூடாது. இவ்வாறு மறைக்கப்படுவதால், இலங்கையில் அடிக்கடி எழும் பொருளாதார பிரச்சினைகள் அரசியலாக்கப்பட்டு அதன் விளைவாக மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். இந்த நேரத்தில், படித்த மற்றும் அறிவார்ந்த மக்கள் நாட்டின் தற்போதைய பொருளாதாரநிலை குறித்து நனவுடன் சிந்திக்க வேண்டும். - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

### தீயில்...

ஒருவர் உயிரிழந்துள்ளார். அதனையடுத்து, அவருடைய கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வசித்த வீட்டிலிருந்து நேற்று புகை வெளிவருவதை அவதானித்த அயலவர்கள் உடனடியாக ஓடிச்சென்று யன்னலூடாக அவதானித்தனர்.

அப்போது குறித்த வீட்டில் வசித்து வந்த குடும்ப பெண் தீயில் எரிந்துகொண்டிருந்தார். உடனடியாக விரைந்து செயற்பட்டு கதவை உடைத்து தீயை அணைப்பதற்கு முயற்சிசெய்தனர். எனினும், அந்தப் பெண் எரிந்து உயிரிழந்துவிட்டார்.

சம்பவத்தில் ராஜகுலேந்திரன் அனித்தா (வயது -43), என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்றபோது அவரது வீட்டுக்குள் எவரும் இருக்கவில்லை. எனினும், அவரது 14 வயதான மகன் மலசல கூடத்துக்குச் சென்றிருந்தநிலையில் மலசலகூடத்தின் கதவு வெளிப்புறமாக பூட்டப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலத்தை பார்வையிட்ட நீதிவான் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அறை ஒன்றும் முழுமையாக எரிந்து உடமைகளும் அழிவடைந்துள்ளன. சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் பெண்ணின் கணவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பூவரசங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-110)

### வர்த்தகர்...

உயிரை மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில், சாவகச்சேரி கிராம்புவில் பகுதியைச் சேர்ந்த ச.கனகரத்தினம் (வயது - 65) என்பவரே உயிரிழந்தவராவார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-9)

### காயமடைந்தவர்...

மோதியதால் காயமடைந்தவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில், யாழ்ப்பாணம் மடம் வீதியைச் சேர்ந்த நாகன் தம்பிராசா (வயது - 74) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவர் கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கச்சேரி நோக்கி செல்லும்போது மருத்துவமனை வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றிருந்தது. விபத்தையடுத்து சுமார் 30 நிமிடங்களாக சம்பவ இடத்திலேயே அவர் வீழ்ந்து கிடந்துள்ளார் என்று கூறப்பட்டது. அதன்பின்னரே அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

# சேதனப் பசளையால் எதிர்பார்க்குமளவு விளைச்சல் கிட்டுவதற்கு வாய்ப்பில்லை

## மன்னார் விவசாயிகள் தெரிவிப்பு

**மன்னார், ஒக். 15**
**மன்னார் மாவட்டத்தில் சேதனப் பசளையை பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொள்வது சாத்தியமான பெறுபேறுகளைத் தரமாட்டாது. இதனால் மன்னார் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்புகளுக்கு உள்ளாகும் என மன்னார் விவசாயிகள் தெரிவித்தனர்.**




மன்னார் மாவட்டத்தில் பிரதானமான குளமாக விளங்கும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 2021 - 2022 ஆண்டுக்காக தற்பொழுது மேற்கொள்ளப்பட இருக்கும் காலபோக நெற்செய்கை தொடர்பாக முன்னோடிக் கூட்டம் கடந்த வாரம் திட்ட முகாமையாளர் கே.டி.ஜேக்கப் தலைமையில் முருங்கனில் நடைபெற்றது.

இதன்போதே விவசாயிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இந்தக் கூட்டத்தில் மாகாண விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளரின் பிரதிநிதியாக கலந்துகொண்ட நானாட்டான் பகுதி விவசாய போதனாசிரியரால் சேதனப் பசளை உற்பத்தி முறைபற்றி விளக்கவுரை வழங்கப்பட்டது.

சேதனப் பசளையுடன் கலப்பதற்கு நைதரசன் மூலக் கூறு அடங்கிய பொதி திரவமாகவோ திண்மமாகவோ வழங்கப்படும் எனவும் பொஸ்பேற்றை தமது கமநலகேந்திர நிலையங்களில் தற்போது பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ம-60)



## அரசர்கேணியில்

# தொடர்ச்சியாக அழிக்கப்படும் விவசாயிகளின் வாழ்வாதாரம்

கிளிநொச்சி, ஒக்.15
அரசர்கேணிப் பகுதியில் விவசாயிகளின் வாழ்வாதாரம் விசமிகளால் அழிக்கப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமமே அரசர்கேணி.

குறித்த கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் விவசாயச் செய்கையில் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் விவசாயி ஒருவருடைய விவசாயக் காணியில் அமைக்கப்பட்டிருந்த கொட்டில் ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளது. அங்கு இருந்த விவசாய உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை குறித்த காணிக்கு அருகில் காணப்பட்ட மற்றொரு விவசாயக் காணியில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட மிளகாய்ச் செடிகள் மிளகாய்களுடன் இனந்தெரியாத நபர்களால் அண்மையில் பிடுங்கி எறியப்பட்டன.

அண்மைய நாள்களாக குறித்த கிராமத்தில் வாழ்வாதாரத்துக்காக விவசாயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பயிர்களும் உடைமைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனை நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

# "உண்மையைச் சொல்லுங்கள்"

## சுற்றுலாவுக்கு வந்த அமெரிக்கர் 5 மணி நேரத்தில் திரும்பிப் பயணம்

கொழும்பு, ஒக்.15
இலங்கை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கு சுற்றுலா வந்த அமெரிக்க நாட்டவர் ஒருவர், இங்குள்ள நிலைமைகளை அவதானித்து உடனடியாக மீண்டும் தனது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுள்ளார்.

தனது இலங்கைப் பயண அனுபவங்களை அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளதுடன், கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்துள்ளார்.

"எனது பெயர் ஜோர்ச். நான் இப்போதுதான் இலங்கையில் இருந்து திரும்பி வந்துள்ளேன். நான் இலங்கையில் ஐந்து மணித்தியாலங்கள் மட்டுமே தங்கியிருந்தேன்.

நான் இலங்கையில் ஒருவார கால சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்பினேன்.

வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்புகொண்டு அனைத்து விவரங்கலையும் கேட்டறிந்தேன். அனைத்தும் திறந்துள்ளன. நீங்கள் எது குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தை மட்டும் கொண்டுவாருங்கள். தடுப்பூசி செலுத்தியமைக்கான ஆவணத்தையும், நுழைவு விசாவையும் கொண்டு வாருங்கள். அது போதும் என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறிய அனைத்துக்கும் உடன்பட்டு எனது பயணத்தை ஆரம்பித்தேன். மெக்சிக்கோ சிட்டியில் இருந்து இஸ்தான்புல் சென்றேன். இஸ்தான்புல் விமான நிலையத்தில் 16 மணித்தியாலங்கள் இருந்தேன். பின்னர் மாலைதீவு சென்று, அங்கிருந்து கொழும்புக்குச் சென்றேன்.

நான் அங்கு சென்றபோது நான் முற்கூட்டியே பதிவு செய்திருந்த வாடகைக் காரைக் காணவில்லை. ஜேர்மன் கார் நிறுவனத்தின் மூலமாக முன்பதிவு செய்திருந்தேன். ஆனால் எந்தப் பதிவும் இலங்கை விமான நிலையத்தில் இருக்கவில்லை. நிறுவனத்தைச் சேர்ந்த எவரும் இருக்கவில்லை, என்னைச் சந்திக்கவும் இல்லை.

நான் ரயில் சேவைகள் உள்ளனவா என்று கேட்டேன். எந்தப் போக்குவரத்துச் சேவையும் இல்லை என்பதை அறிந்தேன். ரயில்கள் இல்லை, பஸ்கள் இல்லை, அடிப்படையில் இலங்கை முடக்க நிலையில் உள்ளது. ஆனால் உத்தியோகபூர்வமாக இலங்கை திறக்கப்பட்டுள்ளது.

அதனால் நான் இலங்கையில் தொடர்ந்தும் இருக்கப்போகின்றேனா?, அதனால் ஏற்படும் நன்மைகள், பாதிப்புகள் தொடர்பாக ஆராய்ந்தேன். விடுதிகள், உணவகங்கள் திறந்துள்ளனவா?, ஏதாவது போக்குவரத்துச் சேவைகள் இயங்குகின்றனவா? என்பதை முச்சக்கர வண்டி ஒன்றை ஏற்பாடு செய்து சுற்றிப் பார்த்த பின்னர் மீண்டும் திரும்பிச் செல்லத் தீர்மானித்தேன். 7ஆம் திகதி நான் இலங்கை வந்த அதே விமானத்தில் இஸ்தான்புல் வந்துள்ளேன்.

அங்கு பிரச்சினை உள்ளது. ஒன்று நாட்டைத் திறக்க வேண்டும், அல்லது நாடு முடக்கப்பட்டுள்ளது என்பதை உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நான் மீண்டும் இலங்கை செல்வேன், ஆனால் இப்போது இல்லை. நீங்கள் உங்கள் நடவடிக்கையைச் சரியான விதத்தில் முன்னெடுத்த பின்னர் நான் அங்கு திரும்பச் செல்வேன்" என்று அவர் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணித்துள்ளார் - என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

# மரண அறிவித்தல்



## நாகன் தம்பிராசா

யாழ்ப்பாணம் மடம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் தம்பிராசா அவர்கள் நேற்று (14.10.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகன் கதிரி அவர்களின் அன்பு மகனும், மாரி முத்தன் செல்லம்மா தம்பதியரின் மருமகனும், தமயந்தினி, தயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மர், காலஞ்சென்ற பரமேஸ்வரி, புஸ்பராணி, தாமோதிரம் ஆகியோரின் சகோதரரும், செல்வராசா, குலதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தெய்வேந்திரம், செல்வராணி, சங்கர், காலஞ்சென்ற இராயேஸ்வரி, சிவசோதி, மகாராஜ் அவர்களின் மைத்துனரும், சர்மா, சாந்து, கிஷா, ரசிகா, ஜெனி, மௌழி, சிந்து, அசின் ஆகியோரின் அன்பு பேரனும் டிவ்சா அவரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் யாழ் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 800 4186**

# திறன் வகுப்பறை திறப்பு விழா

**யாழ்ப்பாணம், ஒக். 15**
**யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறைத் திறப்புவிழா நடைபெறவுள்ளது. கனடா வாழ் பழைய மாணவர் ஒன்றியத்தின் நிதியில் இந்த வகுப்பறை வழங்கப்பட்டுள்ளது.**

**இந்தத் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவானது இன்று வெள்ளிக்கிழமை விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**(ஒ-ரி)**

# கிருஷ்ணா அடைவு கடை

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.08.2020 முதல் 31.12.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி (15.11.2021) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.11.2021) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறிய தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311

உரிமையாளர்
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5046


## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை

### காங்கேசன்துறை உப அலுவலகம்

# ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

விண்ணப்பதாரர்- இளையதம்பி சுந்தரலிங்கம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை உப அலுவலகத்திற்குட்பட்ட பெரியநாட்டுதேவன்துறை மயிலிட்டி எனும் முகவரியில் அமைந்துள்ளதும் 7812ம் இலக்க 24.02 2021ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு திரு.இ.த. அன்ரன் பாலசிங்கம் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வந்தடைந்ததுமான மயிலிட்டிக் கோவிற்பற்று பெரிய நாட்டுதேவன்துறை இறை சுறாட்டியா வளவு நிலப்பரப்பு 00 குளி 08.92 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K. ஆறுமுகம் அவர்களால் 2010.10.08 ம் திகதி 7235/A இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் துண்டு 1,2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை இளையதம்பி சுந்தரலிங்கம் ஆகியவர் தனது பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த ஆதனமானது இளையதம்பி பெண் வள்ளிமுத்து என்பவரது பெயரில் இருந்தது அவர்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது சீதன உறுதியையும் தவறவிட்டு மரணசாதனம் எதுவுமின்றி இறக்க அவரது திருமணமாகாமல் இறந்த பிள்ளைகள், சீதனமாக ஆதனம் வழங்கப்பட்ட பெண் பிள்ளைகள் தவிர்ந்த இளையதம்பி சுந்தரலிங்கம், இளையதம்பி தனபால சிங்கத்தை மாதாவழி முதுசமாக வந்தடைந்தது. இவர்கள் தமது பெயரில் 7790ம் இலக்க 23.01.2021ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியை எழுதியுள்ளனர். பின்னர் இளையதம்பி தனபாலசிங்கம் 7812ம் இலக்க 2021.02.04ம் திகதிய அறுதி உறுதி மூலம் தனது சொரியலான அரை பங்கை இளையதம்பி சுந்தரலிங்கத்திற்கு விற்பனை செய்துள்ளார்.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பெரிய நாட்டு தேவன்துறை இறை வலிகாமம் வடக்கு பிரதேசசபை வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு J/251 கிராம அலுவலர் பிரிவு "சுறாட்டியா வளவு" நில அளவையாளர் கே.ஆறுமுகம் அவர்கள் 2010.10.08 ம் திகதி 7235/A இலக்கப்படத்தில் துண்டுகள் 1,2,3 எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குழி பதின்மூன்று தசம் மூன்று எட்டும் (நில.பர00 குழி 13.38) கிணறும் இதில் குறித்த படத்தில் துண்டுகள் 1,2 எனச்சுட்டிய குழி எட்டு தசம் ஒன்பது இரண்டும் (குழி 08.92) கிணறும் இந்த குழி 08.92 க்கும் எல்லைகள்

**கிழக்கு** - றோட்டு
**வடக்கு** - இராமசாமி பெண் தங்கரத்தினம்
**மேற்கு** - இளையதம்பி சுந்தரலிங்கம்
**தெற்கு** - குழந்தைவேல் அருணாச்சலம்

மேற்குறித்த ஆதனத்தை இளையதம்பி சுந்தரலிங்கம் ஆகியோர் தங்களது பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே இளையதம்பி சுந்தரலிங்கம் என்பவரது பெயரில் ஆதன உரிமையை உறுதிப்படுத்துவது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாகாது என்பதையும் தெரிவித்துகொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிவடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**

# பற்றியெரிந்த மின்மாற்றி

வட்டுக்கோட்டையில் நேற்றுமாலை 6.30 அளவில் மின்மாற்றி தீப்பற்றி எரிந்ததால் அந்தப் பகுதி முழுவதும் சிறிதுநேரம் மின் தடைப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் உள்ள மின்மாற்றியே தீப்பற்றி எரிந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த மின்சார சபையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். மின்மாற்றியில் ஏற்பட்ட மின்சார கோளாறு காரணமாகவே குறித்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. மின்மாற்றி சுமார் அரைமணி நேரம் தீப்பற்றி எரிந்ததாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

(த-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 07 . 1942



மறைவு 12 . 10 . 2021

### நடராசா சிவப்பி

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் 5 வீட்டுத்திட்டம் நாவற்குழி சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவப்பி 12.10.2021 செவ்வாய் அன்று காலமாகிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டயன் நாகி ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சீனியன் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீனியன் சானப்பெட்டை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னப் பெட்டை, கந்தன் ஆகியோரின் அன்பு சகோதரியும் உதயசந்திரன், அற்புதராசா, காலஞ்சென்ற அன்னக்கிளி ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமாரி, கிஜிதா, சுபா மற்றும் காலஞ்சென்ற ஞானசேகரன் ஆகியோரின் மாமியும், ஜெசி, ஆர்த்தி, நிஷா, வனதீபன், வானுஜன், அதிசயா அற்பிற்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரீத்தி, ரீனா, அஞ்சான், கந்தர்வன், பிரஸ்தீனா, பிரகல்யா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நடேசர் கண்ணலிங்கம்

(தலைவர், நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா சபை)

தோற்றம் : 13.12.1934 மறைவு : 14.10.2021



நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் ஆரம்பகால உறுப்பினரும், செயலாளரும், தற்போதைய தலைவருமாகிய அமரர் நடேசர் கண்ணலிங்கம் அவர்கள் 14.10.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் மறைவு தர்மகர்த்தா சபைக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம்வல்ல மூத்த விநாயக பெருமானை வேண்டி நிற்பதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தர்மகர்த்தா சபை ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**நல்லூர்**
**மூத்த விநாயகர் தேவஸ்தான**
**தர்மகர்த்தா சபை.**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### தவராசா தவராணி

மண்ணில் 1959.01.24 விண்ணில் 2012.10.25

**திதி . தசமி 15.10.2021**

ஆலமரமொன்று அடியோடு சாய்ந்து ஆனதுவோ ஒன்பது ஆண்டு ... !
ஆனாலும் உம் விழுதுகள் நாமெல்லாம் - இன்னமும் வேதனையைக் கடக்க வில்லையே ... !
வானத்தின் நிலவாய் வலம் வந்து - உம் முகத்தினை எமக்கு காட்டிவிடும் . ! தூரம்
இருந்தேனும் உம்மைத் தினம் காணும் வரம் கிடைத்திடாதோ .. ?
நினைக்கா பொழுதில் நிகழ்ந்திட்ட உம் இறுதி நாளின் நினைவுகளை இன்னமும் மறந்திட முடியாமல் நாம் தவிப்பதை நீரும் அறிவீரோ ...!
எத்தனை எத்தனை உறவுகள் இங்கு புத்தம் புதிதாய் வந்திடலாம் ! ஆனாலும் உமக்கீடாய் ஒருவர் வந்திடத்தான் வாய்ப்புண்டோ அம்மா ... !
ஓம் சாந்தி ... ! சாந்தி ... ! சாந்தி ..!

இல . 115/2 , ஆலடி வீதி ,
தோணிக்கல் , வவுனியா

குடும்பத்தினர் .

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07.09.1950

இறப்பு 26.09.2020

## அமரர் கணேஸ்வரி செல்வராசா

(ஓய்வூதியர் விற்பனைத் திணைக்களம்)

*திதி: புரட்டாதி பூர்வபக்க தசமி* [15.10.2021]

ஆண்டு ஒன்றானாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு அழியவில்லை
ஆறுமோ எம்மனம் அவனியிலே
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
சுன்னாகம் தாளையடி அரிஹர புத்திர ஐயனாரை
- வேண்டி நிற்கிறோம்.

**234, கே.கே.எஸ்.வீதி,**
**சுன்னாகம் வடக்கு,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்**
**021 224 1865**

---

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

தெல்லிப்பழையில் உள்ள வீடு ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப்பணிப்பெண் தேவை.

**070 575 4365, 076 575 4365**

---

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 • 07 • 1968



உதிர்வு 18 • 10 • 2018

## அமரர் பொன்னம்பலம் கஜேந்திரன்

**திதி: தசமி (15.10.2021)**

மூன்றாண்டுகள் கடந்தாலும்
முழுநிலவாய் உம் நினைவுகள்
முயன்றும் முடியவில்லை
அழிவில்லா உம் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி
**க.கிருஷ்ணபவானி**

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 • 10 • 1934



மறைவு 12 • 10 • 2021

அரியாலையூர்

## திரு. S.T. பத்மநாதன்

(முன்னாள் வட கிழக்கு மாகாண விவசாய பிரதிப்பணிப்பாளர், சமாதான நீதவான் )

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.S.T பத்மநாதன் (முன்னாள் வட கிழக்கு மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் சமாதான நீதவான்) அவர்கள் கடந்த (12.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மகிந்தன், சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சீமா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியேஷ், பிரியங்கா, ஹரேஷ், சஜானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (13.10.2021) புதன்கிழமை இடம்பெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**169, கண்டி வீதி,**
**அரியாலை.**

தகவல்
**திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன்**
**(மனைவி ) 021 222 6217**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்: 21.06.1955** **மறைவு :15.09.2021**

## அமரர் திருமதி ரஞ்சினி சற்குணானந்தம்

***திதிவெண்பா***

**ஆண்டு தமிழ்ப்பிலவ ஆவணிப் பூர்வபட்ச**
**தீண்டும் நசமித் திதிசேர்ந்தே -- காண்டகுசீர்**
**நங்கைநல்லாள் ரஞ்சினியும் நானிலத்தை நீத்திறைவன்**
**பங்கயத்தாள் கூடிநின்றாள் பதம்**

எங்கள் குடும்பத் தலைவி இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்தும் ஆறாத்துயரில் இருந்த எமக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை நேரில் வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத் தளங்கள் மூலம் தெரிவித்தவர்களிற்கும், மரணச் சடங்கின் போதும் ஏனைய நிகழ்வுகளின் போதும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி புரிந்தவர்களிற்கும் அனுதாபப் பத்திரம் வெளியிட்டோர் களிற்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துகொள்கின்றோம்.

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியை இன்று (15.10.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் தற்போதைய நாட்டின் சுகாதார விதிமுறைகளிற்கு அமைய நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**46/1, செட்டிதெரு ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

**PEACE (R)**

Stamp Club முத்திரை சேகரித்தல்
Chess சதுரங்கம், Scrabble, Youth Development

**A.S.K.K RAGUNATHAN**

3rd Lane (Sivaguru)
Kachchai Road,
Chavakachcheri.

0044 778 9174 622,
077 198 5872,
076 851 4280.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்




முல்லைத்தீவு உதாப்பிலவுவைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் தனலட்சுமி அமிர்தலிங்கம் (தனம்)**

கடந்த (15.09.2021) புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கான தனலட்சுமி அமிர்தலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (13.10.2021) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.10.2021) வெள்ளிக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மானிப்பாய்) நடைபெறவுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறிய மற்றும் உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். 077 422 2167

**மரண அறிவித்தல்**




**விசுவநாதன் அம்பலவாணர்**

( இளைப்பாறிய உப-அதிபர் யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் )

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதன் அம்பலவாணர் (இளைப்பாறிய உப அதிபர் - யா / அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்) அவர்கள் கொழும்பில் இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற விசுவநாதன் கைலாயபதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற காரைநகர் பயிரிக்கூடல் கந்தையா சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கோமளம் ( இளைப்பாறிய அதிபர் - யா / அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், பிருந்தா ( வைத்தியர்), சுகந்தா (மிருக வைத்தியர்), ஜயந்தா (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவகாந்தன் (பொறியியலாளர்), விஷ்ணுகுமார் (பொறியியலாளர்), சிவானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஜன், லக்ஷன், ஜெய்ஷன், சீத்தாளினி, நதினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிற்றம்பலம் அவர்களின் அன்புச் சகோதரனும், நவரட்ணராஜா (லண்டன்), வேதாரணியம்மா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் இரத்தினேஸ்வரி, சுசீலா(லண்டன்), நரேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (15.10.2021) காலை 8.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் கிரியைகள் நடைபெற்று, 10.00 மணியளவில் தெஹிவளை - கல்கிசை பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

மனைவி - 0774322837, Dr.பிருந்தா ( மகள் ) - 0777718061,
Dr.சுகந்தா ( மகள் ) - 0777259102, Eng.ஜயந்தா ( மகன் ) - 0779226052

ஏழாவது ஆண்டு நூவிழி அஞ்சலிகள்

**ஜனார்த்தனன் அச்சுதன்**

திதி: விஜயதசமி
(15.10.2021 வெள்ளிக்கிழமை)



மண் விட்டு மறைந்தாலும் அச்சு
விண்ணோக்கி சென்றாலும்
கண்விட்டு மறையாமல் எங்கள் முன்னே
நீ இருப்பாய் அச்சு...

**கோகிலமகா புடைவையகம்**
22, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா(சிவமலர்), குடும்பத்தினர்.

**எண் கணித சோதிடர் (லண்டன்)**

எண் கணித சோதிடர் (லண்டன்) இரண்டு கிழமைகள் மட்டும் சாவகச்சேரியில் உங்களுக்கு நாகதோஷம், செவ்வாய் குற்றம், வெளிநாட்டுப் பயணம், மேற்படிப்பு இவைகளை நிவர்த்தி செய்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

**ஆ.சி.கா.கா. இரகுநாதன்**

சிவகுரு லேன்,
3ம் ஒழுங்கை,
சாவகச்சேரி.
PEACE (R)

0044 778 9174 622.
077 198 5872, 076 851 4280.
(Viber Whats up Free)

**PEACE (R)**

Property Mangement Consultant Civil / Irrigation / Water Supply / Sanitary Engineering

**A.S.K.K RAGUNATHAN**

3rd Lane (Sivaguru)
Kachchai Road,
Chavakachcheri.

0044 778 9174 622,
077 198 5872,
076 851 4280.

யாழ் அறிவுத்திருக்கோவில்

15.10.2021

சிறப்புரை

சொல்வேந்தர் சுகி.சிவம் (தமிழ்நாடு-இந்தியா)

“மனமும் அறிவும்”



மாலை 05:00 மணி
தொடக்கம் மெய்நிகர் ஊடாக...
Zoom ID : 950 678 6590 | Password : vetha

**அஞ்சலி**



நல்லூர் கந்தன் தேவஸ்தான அறங்காவலர்
(எஜமான்)

**குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்**

அவர்கள் நல்லூர் கந்தன் திருவடி நிழல் சென்றடைந்தமையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருத்திகா பிருந்தாவனம்**
**363, கோயில் வீதி, நல்லூர்.**

## வடக்கு மாகாணத்தில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திர தண்டப்பண விலக்களிப்பு காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

வடக்கு மாகாணத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால், வடக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான வாகன வருமானவரி அனுமதிப்பத்திர தண்டப்பண விலக்களிப்பு காலப்பகுதி மேலும் பின்தள்ளப்பட்டு, எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண மோட்டார் வாகனப்போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் திருமதி சி.சுஜீவா குறிப்பிட்டார்.

விலக்களிப்பு காலப்பகுதி எதிர்வரும் 15ஆம் திகதிவரை (இன்றுவரை) என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும், கணினிப் பொறிமுறையில் ஏற்பட்டுள்ள சீரற்றதன்மை காரணமாகவே எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மக்களின் அசௌகரியத்தை தவிர்க்கும் நோக்கில், ஒக்ரோபர் மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாள்களான எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளிலும் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் எண்ணிக்கை குறைந்து பின்வரும் பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்கள் மற்றும் கைதடியில் அமைந்துள்ள எமது திணைக்கள கருமபீடங்களின் ஊடாக காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, யாழ்.மாவட்டத்தில் காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தல் கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா, வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தை மேற்கு.- என்று ஆணையாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

## சாரதியை தாக்கினர் வனவள அதிகாரிகள்

கிளிநொச்சி, ஒக். 15

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மணல் ஏற்றியமைக்காக வனவளத் திணைக்கள ஊழியர்கள் தன்னைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டி, சாரதி ஒருவர் மருத்துவமனையில் சேர்ந்துள்ளார். இந்தச் சம்பவம், அக்கராயன் வீதியை அண்மித்த பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றது. டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்த வனவள திணைக்களத்தினர், தன்னை இரும்புக் கம்பியால் தாக்கினர் என்று அவர் குற்றஞ்சாட்டினார். பின்னர், தமது அலுவலகத்துக்கு தன்னை அழைத்துச்சென்று, அதன் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் அவர் தெரிவித்தார். (த-6)

## 13ஐ....

மன்னாரில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தான் சிறந்ததாக அமையும். இந்தியா இந்தவிடயத்தில் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

அதிகாரம் இல்லாத மாகாண சபையை நாங்கள் ஏற்றுக்கொண்டு அதனூடாக எங்களது நிலங்களை பாதுகாப்பது மற்றும் எமது பிரச்சினைகளை கையாள்வது என்பது கேலித்தனமான விடயமாக வுள்ளது.

**விவசாயிகளுக்குக்கூட உணவில்லாத நிலை**

அரசாங்கத்தின் திட்டமிடப்படாத செயற்பாடுகளால் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நாட்டுக்கே உணவை வழங்குகின்ற விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. திட்டமிடப்படாத செயற்பாடு என கூறியமைக்கு காரணம், விவசாயிகளை இயற்கையான பசளைக்கு மாற்ற வேண்டும் என்றால் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். உடனடியாக செயற்கை உரத்தை நிறுத்தி இயற்கை உரங்களுக்கு மாறுங்கள் என்று கூறினால் விவசாயிகளால் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்தின் செயற்பாடுகள் வேடிக்கையாகவுள்ளன.

எனவே விவசாயிகளுக்கு செயற்கை உரங்களை வழங்கிக்கொண்டு இயற்கையான உரத்துக்கு மாறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

விவசாய நடவடிக்கைகளுக்காக அடகு வைக்கிற தங்க நகைகளை மீட்கவும், பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்தவும் முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். இதனால் இலங்கை பெரும் பஞ்சத்தை எதிர்நோக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் விவசாயிகளுக்கு உரம் வழங்கி விவசாயத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**இந்திய மீனவரை கட்டுப்படுத்துங்கள்**

இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்களை காப்பாற்றும் நடவடிக்கையில் இறங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அவர் எடுக்கும்போது அவருடன் சேர்ந்து செயற்படத் தயாராக இருக்கிறோம். பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படவேண்டும் - என்றார். (த-56)

## வடக்கில்...

கள் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் இந்த அறிவிப்பை விடுத்தார். வடக்கு உட்பட நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் மேற்குறித்த வகுப்புகள் மாத்திரம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதன்பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்.வலயத்தில் 58 பாடசாலைகளும், வலிகாமம் வலயத்தில் 100 பாடசாலைகளும், வடமராட்சி வலயத்தில் 50 பாடசாலைகளும், தென்மராட்சி வலயத்தில் 45 பாடசாலைகளும், தீவக வலயத்தில் 54 பாடசாலைகளுமாக 307 பாடசாலைகள் இயங்கவுள்ளன.

கிளிநொச்சி வலயத்தில் 52 பாடசாலைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு வலயத்தில் 34 பாடசாலைகளும், துணுக்காய் வலயத்தில் 48 பாடசாலைகளுமாக 82 பாடசாலைகள் இயங்கவுள்ளன. மன்னார் மாவட்டத்தின் மன்னார் வலயத்தில் 44 பாடசாலைகளும், மடு வலயத்தில் 34 பாடசாலைகளுமாக 78 பாடசாலைகள் இயங்கவுள்ளன. வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு வலயத்தில் 64 பாடசாலைகளும் வவுனியா தெற்கு வலயத்தில் 58 பாடசாலைகளுமாக 112 பாடசாலைகள் இயங்கவுள்ளன என்று செயலாளர் அறிவித்துள்ளார். (த- 9)

## மீனவர்களின்...

யும் மோதவைக்கும் அரசின் நோக்கத்தை சில தமிழ் அரசியல் சக்திகள் செயலில் காட்டத் தொடங்கியுள்ளனவா என்ற கேள்வி எழுந்துள்ளது - என்று, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்புக்குள் தொடர்ந்து ஊடுருவும் தமிழ்நாட்டு ஆழ்கடல் இழுவிசைப் படகுகளால், எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்துக்கு, தமிழ்நாட்டு உறவுகள் நீண்ட காலமாக தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதனை வலுவிழக்கச் செய்வதற்காக, அரசியல் தூரநோக்கத்துடன்கூடிய சிங்கள பேரினவாத சக்திகளின் சதித் திட்டத்துக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் சில தமிழ் அரசியல் சக்திகளால் எண்ணெய் ஊற்றப்படுகின்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இருதரப்பு மீனவர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுவதன் ஊடாக, இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் ஆதரவுத் தளத்தை ஆட்டம் காணவைக்க முடியும் என்ற நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் சிங்களப் பேரினவாதிகள் செயற்படுகின்றனர்.

தமிழ்நாட்டு மீனவர்களையும், எமது மீனவர்களையும் மோதவைக்க விரிக்கப்பட்டிருக்கும் சதிவலைக்குள் நம்மவர்கள் சிக்கிக்கொள்ளக் கூடாது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்தியப் படகுகளை மடக்கிப் பிடிப்பதையும், அவற்றில் இருப்பவர்களைக் கைது செய்து, சட்டத்துக்கு அமைவாக நீதிமன்றில் நிறுத்துவதையும் தனது கடற்படை ஊடாக செய்ய வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு.

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத் திட்டத்தில் கடற்படையையும் உள்ளடக்கிய பாதுகாப்புத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த முறையும் செய்யப்பட உள்ளது.

இலங்கைக் கடற்படையிடம் நவீன வசதிகளுடன் கூடிய கப்பல்களும், அதிவேக ரோந்துப்படகுகளும் போதிய அளவுக்கு அதிகமாகவே உள்ளன. இருந்தும் அயல் நாட்டு மீன்பிடிப்படகுகளின் எல்லை தாண்டும் அத்துமீறல்கள் தடையின்றி தொடர்கின்றன என்றால், அதற்கு யார் பொறுப்பு? எந்தக் காரணத்தால் இந்த நிலைமை நீடித்து நிற்கின்றது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டியது இலங்கை அரசு மட்டுமே. பாதிக்கப்பட்டிருக்கும் தரப்பின் சார்பில், அதிகாரத்தரப்பின் ஆதி மூலத்தோடு அழுத்திப் பேச வேண்டுமே தவிர, பூசாரிகளோடும் பூக்கட்டு வோரோடும் நம்மில் எவரும் நேரத்தை வீணடிக்கக் கூடாது- என்றார். (த-4)

## தொற்றுநீக்கி...

துள்ளனர். மேலும் 10 கைதிகள் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளே தொற்று நீக்கி மருந்தை அருந்தியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

குறித்த கைதிகளை பார்வையிடுவதற்காக் நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த ஈரான் தூதரக அதிகாரிகள், குறித்த கைதிகளுக்கு தொற்றுநீக்கியை வழங்கிச் சென்றிருந்தனர் என்றும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

## 6 மாதங்களின்...

தீன் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார். 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகள் உள்ளிட்ட நிபந்தனைகளுடன் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதில் குறிப்பாக, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அவர் முற்படவேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

அவர் மீதான பிணை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் எதிர்ப்பு தெரிவிக்காததால் நீதிவான் பிணை வழங்கி உத்தரவிட்டார்.

இதேவேளை, பணிக்கமர்த்தப்பட்டிருந்த சிறுமி ஹிஷாலினியின் உயிரிழப்பு தொடர்பிலான வழக்கிலும் ரிஷாத் பதியுதீனுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணைகளில் அவரை விடுவிப்பதற்கு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய நேற்று அனுமதித்தார்.

முன்னாள் அமைச்சர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கும் தடைவிதித்து மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்துள்ளன என்று சட்டமா அதிபர் சார்பில் முற்பட்ட அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஹன்சு அபயரத்ன மன்றில் நேற்று அறிவித்தார்.

இந்தநிலையில் பிரதிவாதி தரப்பால் முன்வைக்கப்பட்ட பிணைக் கோரிக்கையை பரிசீலித்த மேலதிக நீதிவான் பிணை வழங்கி உத்தரவிட்டார். (த-இ)

## வருட இறுதிக்குள்...

லொக்குகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதற்கு கடந்த அரசே பொறுப்புகூற வேண்டும். சட்டதிருத்தத்தை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்தமுடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, உரிய ஏற்பாடுகளின் பின்னர் அடுத்த வருடம் முற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

அதேவேளை, புதிய அரசமைப்பு நிச்சயம் இயற்றப்படும். அதற்கான வரைவு நகலை தயாரிப்பதற்காக நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆளும், எதிரணி என அனைத்து தரப்புகளிடம் கருத்துகளை, ஆலோசனைகளைப் பெற்றது. இந்தவருடத்துக்குள் ஆரம்பக்கட்ட வரைவு நகல் முன்வைக்கப்படும்.

நாட்டில் பொருள்களின் விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் தவறால் விலை உயர்வு இடம்பெறவில்லை. உலக சந்தை நிலவரத்துக்கு அமையவே மாற்றம் இடம்பெற்றது." - என்றார். (த-44)

## சுழியில்...

சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சுழியில் அகப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம், நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

சம்பவத்தில், அதே பகுதியைச் சேர்ந்த சிவபாதம் ஸ்ரீசங்கர் (வயது - 34) என்பவரே உயிரிழந்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-19)

## கூட்டமைப்புக்கு...

கூட்டமைப்பின் தலைமை என்பது கூட்டுத்தலைமையாகவே இருக்கும்." - என்று, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை ஏற்கத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவினர்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சுமந்திரன் கூறியது, அவரது தனிப்பட்ட கருத்து. அவரின் தனிப்பட்ட கருத்தை பெரிய விடயமாகப் பார்க்கத் தேவையில்லை. அதை ஏற்பதா? இல்லையா? என்பதை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முடிவெடுக்கும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-56)

# சர்வ வல்லமைகள் பொருந்திய இராணுவத்தை உருவாக்குவோம்

## வடகொரிய அதிபர் கிம் தெரிவிப்பு



**பியாங்யாங், ஒக். 15**

**எந்த நாட்டாலும் வீழ்த்த முடியாத இராணுவத்தை உருவாக்கப் போகிறோம் என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்தார். வடகொரிய இராணுவத்தால் நடத்தப்பட்ட பாதுகாப்பு மேம்பாட்டுக் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே கிம் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 'எந்த நாட்டாலும் வீழ்த்த முடியாத இராணுவத்தை உருவாக்கப் போகிறோம். தென்கொரியாவின் ஆயுதக் குவிப்பும், அமெரிக்காவின் விரோதப் போக்குமே வடகொரியா தனது இராணுவத்தை மேம்படுத்தக் காரணமாகிறது. தற்காப்புக்காகவே நாங்கள் ஏவுகணைப் பரிசோதனைகளைச் செய்கிறோம்.

வடகொரியா அதன் இராணுவ பலத்தை அதிகரிக்கவே விரும்புகிறது. போரை விரும்பவில்லை. நாங்கள் வலிமையாக இருக்க வேண்டும்.

நம் நாடு எதிர்கொள்ளும் இராணுவ அச்சுறுத்தல்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பார்த்ததை விட வித்தியாசமானவை' - என்றார். முன்னதாக, ஏவுகணைச் சோதனை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை இரட்டை மனநிலையில் நடந்து கொள்வதாக வடகொரியா குற்றம்சாட்டியது. ஏவுகணைச் சோதனை நடத்தி அண்டை நாடுகளுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் வடகொரியாவுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை பலமுறை எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏவுகணைச் சோதனை காரணமாகவே அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் மோதல் நிலவியது. வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை காரணமாகப் பல்வேறு பொருளாதாரத் தடைகளை அந்த நாட்டின் மீது அமெரிக்கா விதித்துள் ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை.

**077 998 8066**

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகாமையில் 4 அறைகள். 3 Halls, 2 bathrooms (one is attached) 10 வாகனங்கள் தரித்து விடக் கூடிய இடப்பரப்புடைய வீடு வாடகைக்குண்டு. வீடு முழுவதும் மாபிள் பதிக்கப் பட்டுள்ளது. நிறுவனங்களுக்கு பொருத்தமானது. ஏனையோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு **077 921 5143**

# தடுப்பூசி போடாததால் கால்பந்தாட்டத்தைப் பார்க்க பிரேசில் அதிபருக்குத் தடை

பிரேசிலியா, ஒக். 15

கொரோனாத் தடுப்பூசி போடவில்லை என்ற காரணத்தால் மைதானத்தில் அமர்ந்து கால்பந்தாட்டத்தை நேரில் பார்ப்பதற்கு பிரேசில் அதிபருக்கு அவரின் நாட்டிலேயே அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் சாதாரண காய்ச்சல் போன்றதே எனக் கூறிவரும் பிரேசில் அதிபர் போல்சனரோ வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கை அமுல்படுத்துவது, தனிமைப்படுத்துதல் மற்றும் முகக்கவசம் அணிவது போன்ற தற்காப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துவருகிறார். அதேபோல் கொரோனாத்தடுப்பூசி போட்டுக்கொள்ளவும் அவர் மறுத்து வருகிறார். இந்த நிலையில் பிரேசிலின் சா பாலோ நகரில் குடும்பத்தோடு விடுமுறையை கொண்டாடிவரும் அதிபர் போல்சனரோ உள்நாட்டு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டியைப் பார்ப்பதற்காக அங்குள்ள மைதானத்துக்குச் சென்றார்.

ஆனால் மைதானத்தில் இருந்த அதிகாரிகள் போல்சனரோ கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை என்பதால் அவரை மைதானத்துக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதனால் அவர் அங்கிருந்து கோபத்துடன் புறப்பட்டுச் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், "எதற்கு தடுப்பூசிச் சான்றிதழ்? நான் கால்பந்து விளையாட்டைப் பார்க்க விரும்பினேன். அதற்குத் தடுப்பூசி போடவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அது ஏன்? தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களை விட எனக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாக உள்ளது" எனக் கூறினார். (ம)

**காணி விற்பனைக்கு**


யாழ். கோப்பாய், உரும்பிராய் பிரதான வீதியில் 10 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.

(உரும்பிராய் கிருஸ்ணன் கோவிலுக்கு அருகாமை)

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தொடர்பு கொள்ளவும். (1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்).

**077 468 3354 (குரு), 077 288 0152, 077 505 8561**

# மரண அறிவித்தல்



## நடேசர் கண்ணலிங்கம்

**(ஓய்வுநிலை எழுதுவினைஞரும் நல்லூர் மூத்த விநாயகர் கோவில் தலைவரும்)**

கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடேசர் கண்ணலிங்கம் நேற்று (14.10.2021) சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் நல்லூர் நடேசர் சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த புதல்வனும், மலேசியாவைச் சேர்ந்த பாலாம்பிகையின் அன்புக் கணவரும், இராசலட்சுமி, பத்மாவதி, ஜெயலக்சுமி, பரம்சோதி, ஜெகநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் செல்லத்துரை, சதாசிவம், சிவப்பிரகாசம், அமரர் குஞ்சு, கலா, செல்வி ஆகியோரின் மைத்துனரும், திரு. பிரபாகரன், விஷ்ணுகரன், சிவாஷ் கரன், கமலாகரன் (முகாமையாளர், பீப்பிள் லீசிங் கம்பனி - திருகோணமலை), தேவசேனா (ஆசிரியை, அச்செழு மெ.மி பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றாஜினி, உஷா, வாசுகி, நிருபா (ஆசிரியை, பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம்), புவனேந்திரன் (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவிசன், சிவிசன், தினேஸ், அபிஷன், அபிராமி, தேவாஜினி, பிருந்தாஜினி, மதுராஜினி, சாகித்தியா, ஆருஷன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2021) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன் - கமலாகரன்**
**077 547 8159**

# மின் உற்பத்தி நிறுத்தம் இருளுக்குள் லெபனான்!

பெய்ருட், ஒக். 15

லெபனானின் முக்கிய மின்நிலையங்களில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால் நாடே இருளில் மூழ்கியுள்ளது.

இதுகுறித்து லெபனான் அரசு தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'எரிபொருள் பற்றாக்குறை காரணமாக ஜஹ்ரானி மின் நிலையத்தில் உள்ள தெர்மோ எலக்ட்ரிக் ஆலையும் டீர் அம்மர் ஆலையும் நிறுத்தப்பட்டன. நாட்டின் முக்கிய இரண்டு மின் நிலையங்களிலும் பணிநிறுத்தம் காரணமாக மின் வலையமைப்பு முழுமையாக செயலிழந்துவிட்டது. தற்போது உடனடியாக செயற்பாடுகளை மீண்டும் தொடங்கும் சாத்தியம் இல்லை' - என்றுள்ளது. (ம)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.